**செய்தி வெளியீடு எண்**. 675 **நாள்.2.10.2009**

**தமிழ்நாடு அரசின் சார்பில் உத்தமர் காந்தியடிகள் 141-வது பிறந்த நாள் விழா - 2.10.2009 (வெள்ளிக்கிழமை) சிறப்பாக கொண்டாடப்பட்டது.**

தமிழக அரசின் சார்பில், உத்தமர் காந்தியடிகளின் 141-வது பிறந்த நாள் விழாவினையொட்டி, 2.10.2009 (வெள்ளிக்கிழமை) காலை 8.30 மணிக்கு சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

2.10.09 அன்று காலை 7 மணி முதல் 9 மணிவரை உத்தமர் காந்தியடிகளின் சிலைக்கு அருகில் நூற்பு வேள்வி, வழிபாடு ஆகிய நிகழ்ச்சிகளும், காலை 8.45 மணிக்கு காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள உத்தமர் காந்தயடிகளின் சிலைக்கு அருகில, தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு, உலக அமைதி, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியிறுத்தும் சைக்கிள் பேரணியை, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் துவக்கி வைத்தார்கள். காலை 9 மணி முதல் 12 மணிவரை காந்தி மண்டபத்தில் நூற்பு வேள்வி, வழிபாடு ஆகிய நிகழ்ச்சிகளும், காலை 10 மணிக்கு, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறை, காதி கிராமதித் தொழில் துறை, மகளிர் சுய உதவிக் குழுக்கள், சமூகநலத்துறை, பணை வாரியம், பூம்புகார் நிறுவனம், ஆவின், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, காந்தி சேவா சங்கம், செஞ்சிலுவை சங்கம், உலக அணு எதிர்ப்பு இயக்கம், எரிசக்தி நிறுவனம், நியூ செஞ்சுரி புக் உறவுஸ் மற்றும் பிற நிறுவனங்கள் பங்கேற்ற புகைப்பட/கைவினைப் பொருட்கள் கண்காட்சியை, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் திறந்து வைத்தார்கள். இக்கண்காட்சி 2.10.2009 முதல் 4.10.2009 வரை தொடர்ந்து நடைபெறும். செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், இரவு 7 மணிக்கு "அண்ணல் காந்தியடிகள்" பற்றிய திரைப்படம் கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திரையிடப்பட்டது . 2.10.2009 முதல் 4.10.2009 வரை நாள்தோறும் மாலையில் பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளான பாடல், நாடகம் மற்றும் தென்னக கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் சார்பில் பரதநாட்டியம், வில்லுப்பாட்டு, தப்பாட்டம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சென்னை காந்தி மண்டபத்தில் 2.10.2009 அன்று மாலை 5 மணிக்கு, தமிழக அரசின் சார்பில், உத்தமர் காந்தியடிகளின் 141-வது பிறந்த நாள் விழாவினையொட்டி, நடைபெற்ற விழாவில், மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் விழாத் தலைமையேற்று, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ-மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கி கௌரவித்து பேருரையாற்றினார்கள்.

விழாவில், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு.க.முத்துசாமி, இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரையாற்றினார்கள்.

விழாவில் நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அறிஞர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ.ஆ.ப. அவர்கள், அரசு அலுவலர்கள் பங்கேற்றார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.